# அடிகளார் வள்ளலார்



சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக இரண்டு மானியங்களை பொறியாளர் நா. மகாலிங்கம் அவர்கள் அளித்துள்ளார்கள்.



வள்ளலார் பற்றியது ஒன்று; காந்தியடிகள் பற்றியது இரண்டாவது. ஒவ்வொன்றிற்கும் ரூ 10,000 வீதம் அளிக்கப் பட்டுள்ளது,


30 காசு

15-10-74

அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்

# கொங்கு

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 15—10—74 தேனீ 10


## வணக்கம்

டாக்டர் மு. வரதராசனார், ஒவ்வொரு நாளும், ஒரு சில பக்கங்களாவது எழுதாமல் இருந்ததில்லையாம். அதனாலேயே ஏராளமான கதைகள் கட்டுரைகள் அவரது எச்சமாக உள்ளன. புதினங்களில் இலக்கியச் சுவையை ஏற்றி எளிய நடையில் பாமரர் உள்ளங்களைக் கவர்ந்தார். ஆசிரியர் கூற்றைக் குறைத்துக்கொண்டு, பாத்திரங்களைப் பேச விட்டு, மாந்த உணர்வுகளின் வெளிப்பாடுகளைத் தந்தார். படைப்பிலக்கிய உலகில் புதிய நோக்கை நிலை நாட்டினார்.

கட்டுரைகளில் தமிழ் நெஞ்சைத் திறந்து காட்டிச் சிந்திக்க வைத்தார். அவை அனல் கக்கும் புரட்சிச் சுடர்கள் அல்ல; உள்ளிருந்தே ஆற்றலைச் சுரக்கும் சஞ்சீவிகள். காலப்போக்கில் உரம்பெற்ற நெஞ்சங்கள் உருவாக அவர் எழுத்துக்கள் உதவியாக இருந்தன.

தலைமுறை வேறுபாடுகளை மறந்துவிடாமல், தமிழ் நெஞ்சம் காலத்திற்கேற்ப ஏற்றம் பெறும் வழி வகைகள் அவரது எழுத்துக்களில் எப்போதும் இடம்பெற்றன.

—ஆசிரியர்.

# வரலாற்றில் உறையூர்

அ அப்துல் மஜீத் M.A.

பழங்கலைப் பதிவு அலுவலர்

திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உறையூர் உள்ளது. இவ்வூர் சோழர்களின் பழம்பெரும் தலைநகராக விளங்கிற்று. சோழ நாடு இப்பொழுதுள்ள திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செங்கற்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களை தன்னகத்தே கொண்டிருந்தது. இந்நாட்டில் இரண்டு தலைநகரங்கள் இருந்தன. அவைகளில் ஒன்று உறையூராகும். மற்றது தஞ்சை மாவட்டத்திலுள்ள காவிரிப் பூம்பட்டினமாகும். இக்காவிரிப்பூம்பட்டினம் இளஞ்சேட் சென்னியின் புதல்வன் கரிகாலன் காலத்தில் சிறப்புற்று விளங்கிற்று காலப்போக்கில் இப்பழைய நகரமும் தன் பொலிவை இழந்தது.

சங்ககால நூல்கள் உறையூரையும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையையும் நனகு படம் பிடித்து காண்பிக்கிறது. இச்சங்க இலக்கியங்கள் உறையூரை உறந்தை, வாரணம், கோழி என்று பல பெயர்களில் அழைகின்றன. இவ்வூர் திருமுக்கீச்சரம், குடக்காபுரி, வில்வவனம், மஞூரா வனம், நிசுலாபுரி என்று பல பெயர்களால் அழைக்கப் பட்டது.

தென்னாட்டு அரசுகளைப் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் அசோகருடைய கல்வெட்டு சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும், கேரள நாட்டையும் குறிக்கிறதே தவிர, வெளிப் படையாக உறையூரைக் குறிக்கவில்லை.[1]

சங்க கால நூல்கள் உறந்தையினுடைய அரசர்களின் பெயர்களை பல இடங்களில் குறிப்பிடுகின்றன. வெளியன் தித்தன் காவிரிப் பாயும் கடலோரப் பகுதிகளைக் கொண்ட

எல்லைகளையுடைய உறையூரைக் கைப்பற்றி தனதாக்கிக் கொண்டான். இவன் காவிரிப் பாயும் இடத்திற்கு அருகி லுள்ள கடற்கரைப் பட்டினமான வீரை என்ற நகரத்தின் அரசன் நற்றிணையின் 58-ஆம் பாடலில் இவன் வீரையினு டைய அரசன் என்று குறிப்பிட்டுள்ளான். தித்தனுடைய தலைநகரம் கடலோரத்திலுள்ள வீரையாகும்.

வெளியின் தித்தன் உறையூரைக் கைப்பற்றி பிறர் தாக் காத வண்ணம் உறையூரின் அரணை அமைத்தான். இதை பரணரும், முதுகூத்தனாரும் கீழ்கண்டவாறு கூறுகின்றனர்.

**நொச்சி வேலித் தித்தன் உறந்தை**
**கன்முதிர் புறங்காட்ட ன்ன**

(பரணர், அகம் - பாடல் 122)

**வென்றெறி முரசின் விறற் போர் சோழர்**
**இன்கடுங்கள்வின் உறந்தை ஆங்கண்.**

(முதுகூத்தனார், அகம் - பாடல் 137)

இதிலிருந்து முதல் சோழ அரசன் பெயர் வீரைவேல்மான் வெளியன் தித்தன் என்றும், அவனுடைய தலைநகரப் கடற் கரைச் சார்ந்த வீரை என்றும், பின்பு அவன் உறையூரைக் கைப்பற்றி அரணமைத்தான் என்றும் அறிகிறோம்.

உறையூர் என்ற பெயரிலிருந்துதான் உறந்தை என்ற பெயர் வந்திருக்க வேண்டும். உறையூர் 'கோழி' என்றும் அழைக்கப் பெற்றது. இங்கு கோழி ஒன்று யானையிடம் சண்டையிட்டு வென்றதால் இவ்வூரை கோழி அல்லது கோழியூர் என்று அழைக்கப் பெற்றது. இக்கதையினை நினைவூட்டுவதற்கு ஏற்ற வகையில் உறையூரிலுள்ள பஞ்ச வர்ணசாமி கோயிலில் கோழியும், யானையும் சண்டையிடும் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது.

சிறுபாணாற்றுப்படை உறந்தையை சோழர்களுடைய தலைநகரமென்று தெளிவாகக் குறிக்கிறது. ஆனால் புகார் பற்றிய செய்தி இதில் இடம் பெறவில்லை.

சோழ நாட்டு மக்கள் சில முக்கிய விழாக்களைக் கொண் டாடினர். அவ்விழாக்கள் பங்குனி உத்திரத்தில் கொண்டா டப்பட்டன.[2] பங்குனிமுயக்கம் என்ற திருநாள் விழாவினை

உறையூரிலுள்ள காவிரிக்கரையில் பங்குனி திங்களில் கொண்டாடினர்.[3]

அகநானூறு, நற்றிணை, புறநானூறு முதலிய சங்க கால நூல்கள் நாளவையைப் பற்றி குறிப்பிடுகின்றன. தித்தனுடைய நாளவை மிகச் சிறப்பானதாக விளங்கிற்று.[4] அகநானூறும், நற்றிணையும் உறந்தை சபையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.[5] இதிலிருந்து சங்க கால சோழர்களுடைய நீதிமுறையினை நன்கு அறியமுடிகிறது.

உறையூரின் இருப்பிடத்தைக் குறிக்கும்பொழுது அகநானூறும், குறுந்தொகையும் பெரியாறு (காவிரி) உறையூரை ஒட்டி ஓடுவதாக கூறுகின்றன.[6] காவிரியின் தென்கரையை படகின் மூலம் கடந்து சோழர்களின் தலைநகரமாகிய உறையூரை கவுந்தி, கோவலன், கண்ணகி முதலியோர் அடைந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.[7]

கரிகாலன் தன் தலைநகரை உறையூரிலிருந்து காவிரிக் கடலோடு கலக்கும் இடமாகிய காவிரிபூம்பட்டினத்திற்கு மாற்றினான் என்று பட்டினப்பாலை கூறுகிறது.[8]

உறையூர் சிறந்த முத்திற்கும், மஸ்லின் துணிகளுக்கும் பெயர் பெற்ற இடமென்று பெரிப்புள்ஸ் குறிப்பிடுகிறார். உறையூர் சோழர்களின் தலைநகரென்றும் சோழ நாட்டின் முக்கிய ஆறு காவிரி என்றும் தாலமி குறிப்பிடுகிறார்.

இதன்பிறகு கி.பி ஆறாம் நூற்றாண்டு வரைக்கும் உறையூரைப் பற்றியச் செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. திருச்சிராப்பள்ளி கல்வெட்டு, சோழ நாடு பல்லவ நாட்டிற்கு தென் திசையிலுள்ளது என்று குறிப்பிடுகிறது.[9]

காவிரிப் பாயும் சோழ நாடு பல்லவ அரசன் சிம்ம விஷ்ணுவால் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.[10]

தேர்மாறன் என்னும் பாண்டியன் கூடல், வஞ்சி, கோழி (உறையூர்) முதலிய இடங்களிலுள்ள அரண்மனைகளையும், உயர்ந்த அரண்களையும் புதுப்பித்தான் என்று நெடுஞ்சடையனின் (கி.பி. 765-790) வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது.[11]

இதிலிருந்து உறையூர் பல்லவரிடமிருந்து பாண்டியருடைய ஆட்சியின்கீழ் வந்ததை அறியலாம்.

விஜயாலயச் சோழன் (கி.பி 850-871) மீண்டும் சோழப் பேரரசை நிறுவி உறையூரைக் கைப்பற்றினான். இப்பேரரசு காலத்தில் பழையாறை, தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழ புரம் முதலியன தலைநகரங்களாக்கப்பட்டன.[12]

பராந்தகனுடைய தலைநகரம் கோழி என்று உதயேந்திரம் செப்பேடு கூறுகிறது.[13]

முதலாம் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216-1238) தஞ்சாவூரையும், உறையூரையும் வென்று தீக்கிரையாக்கினான் என்று திருக்கோயிலூர் கல்வெட்டு கூறுகிறது.[14]

அல்லாவுதீன் கில்ஜியினுடைய படைத் தலைவன் மாலிக் கபூர் வட இந்தியா செல்லும் வழியில் கி.பி. 1310 ஆம் ஆண்டு உறையூரை அழித்தான்.[15]

இரண்டாம் ஹரிஹரரின் (கி.பி. 1377-1404) கல்வெட்டு, விஜயநகரப் பேரரசின்கீழ் உறையூர் இருந்ததைக் குறிப்பிடு கிறது.[16]

மேற்கூறியவைகளால் உறையூர் தொடர்ச்சியான ஒரு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு இன்றளவும் தன் பழமையான சிறப்பினை உலகிற்கு பறைசாற்றிக்கொண்டு பொலிவுடன் திகழ்வதைக் காண்கிறோம்.

**கையாண்ட நூல்கள் :**


1. Sewell : Maski inscription of Asoka—"Historical inscription of South India", Page 12 E.I , Vol. II, page 471.
2. அகம் 4-6 : 5
3. அகம் 137 : 9
4. அகம் 226 : 14 : 331 : 12, நற்றிணை 167 : 4, புறம் 54 : 3.
5. அகம் 83 : 5, நற்றிணை 400 : 7.
6. சிலம்பு, வேனிற்காதை வரி 1-13.
7. அகம் 137 : 6, குறுந்தொகை 116 : 2.
8. பட்டினப்பாலை 285.

# எழுத்துச் சீர்மை

உகர, ஊகார உயிர்மெய் வரிசைக்கு, பக்கக் குறி சேர்ப்பது பற்றி நேயர்களின் கருத்துக்களைக் கேட்டிருந்தோம் இதுவரை வந்துள்ள கடிதங்கள் தரும் ஆதரவைக் கீழே காண்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | ு | ூ (தமிழ் கிரந்தம்) | 84% |
| 2. | ု | ူ (புதியது) | 11% |
| 3. | ു | ൂ (மலையாளம்) | 5% |
| 4. | வேறு குறிகள் | | 4 பேர் |

கருத்துத் தெரிவிக்காத நேயர்கள் விரைவில் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்திட வேண்டுகிறோம். குறிப்பாகத் தனித்தமிழ் அன்பர்களின் கருத்துக்கள் இன்னும் பெருவாரியாக வரவேண்டும்.

பக்கக் குறி போடுவதின் நன்மைகள் ஏராளம், தொலைவரி, தமிழில் இயலும். அச்சு எளிதாகும். ஒரே தட்டச்சுப் பொறியில், மலிவு விலையில், இரண்டு மொழிகள் (தமிழ் ஆங்கிலம்) வைத்துக் கொள்ளலாம்.

மாற்றத்தால் எழுத்துக்கள் முழுச் சீர்மை பெறுகின்றன உங்கள் சின்னஞ்சிறு பிள்ளைகளைக் கேட்டுப் பாருங்கள் அவர்கள் 33 உருவங்கள் படித்துக்கொண்டால் போதும் 247 எழுத்துக்களையும் எழுதலாம்.

கொடியன்

---

9. 62 of 1888.
10. S I.I. II, Page 508.
11. Epi. Ind. Vol. 19 of 1927-28.
12. Archeological Survey of South India, Vol. II by Jes Burgess -Page 45.
13. Sew lls Historical inscriptions Page 43
14. The Historical inscriptions of Southern India, by Robert Swell, Edited by Krishnaswamy Aiyangar, Page 142
15. Gazetteer (1907), Vol. I, page 46 (Trichinapalli).
16. 182 of 1903.

# ஔவையார் நோன்பு

சு. சண்முக சுந்தரம், எம். ஏ.
தமிழ்த்துறை, சென்னைப்பல்கலைக் கழகம்

கன்னி நோன்பு, பாவை நோன்பு, நயினூர் நோன்பு, எனப் பலநோன்புகள் நாட்டு மக்களால் கைக்கொள்ளப்படுகின்றன. மனிதன் தன்பொறிகளை அடக்கிட-ஒடுக்கிட கொண்ட முயற்சியின் விளைவே இந்நோன்புகளின் தோற்றமாகும். நோக்கமில்லா நோன்புகள் நாட்டில் எதுவுமில்லை-என்று மில்லை. பெரும்பான்மையான நோன்புகள் பெண்டிர்க்கே. ஔவையார் நோன்பும் நோக்கமும் ஆக்கமும் உள்ள ஒரு பெண்டிர் நோன்புதான்,

ஔவையார் நோன்பின் நோக்கம் செல்வ வளம் பெறுவதே. வீட்டியில் திருமகள் நிலைக்க வேண்டும் என்று வேண்டுகிறார்கள். தமிழகத்தில் நெல்லை, குமரி மாவட்டங்களிலேயே இந்நோன்பு உண்டு. வேறு மாவட்டங்களில் இந்நோன்பில்லை. வேறு மாநிலங்களில் இருக்க வாய்ப்பில்லை இந்நோன்பில் ஆண்களும் குழந்தைகளும் விலக்கப்படுகிறார்கள். வயதான விதவைத் தாயே தலைமையிடம் பெறுக்கின்றாள். மிகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் விலக்கப்படுகின்றனர். தைத்திங்கள் செவ்வாய்க்கிழமை நடு இரவில் ஊர் அடங்கிய பிறகு இந்நோன்பு எட்டுப் இரண்டு அல்லது எழு சிழமைகள் தொடர்ந்தாற் போன்று நோன்பிருக்கிறார்கள். நோன்பிருக்கும் வீடு சுத்தமாக வெள்ளையிடப்பட்டு அசைவ பொருட்கள் அணுகாத வீடாக இருக்க வேண்டும்.

நோன்பன்று பெண்டிர் கூடுகின்றார்கள். தங்களோடு பச்சரிசி மாவு தேங்காய் விறகு ஆகியவற்றைக் கொணர்வர். முதலில் மாவைப் பிசைத்து பிள்ளையாரும் விளக்கும் செய்கிறார்கள், பின்னர் வீட்டில் பயன்படுத்தப்படும் உலக்கை, உரல், அம்மி, குழவி, சட்டி, பானை போன்ற வடிவங்கள் செய்து தனித்தனியாக உப்பில்லாமல் வேகவைக்கின்றனர். ஒவ்வொரு பங்கிலும் ஒரு பிடிமாவை அள்ளி வெல்லமும் தேங்காயும் இட்டு விரவிவைத்திருப்பர் திரு விளக்கையும் மாவிளக்கிகளையும் ஏற்றி பூசை செய்வர் இந்தப் பூசை செலவுக்கு ஆளுக்கு கால் ரூபாய் கொடுக்க வேண்டும். விடியுமுன்னர் பிறர் முகத்தில் விழிக்காமல் வீட்டிற்கு வர வேண்டும். மாவிளக்கையும், வெள்ள மிட்ட மாவையும்வீட்டிற்குக்

கொண்டுவரக் கூடாது. நோன்பு வீட்டிலேயே உண்டுவிட வேண்டும். வீட்டிற்குக் கொணர்ந்த கொழுக்கட்டைகளை மந்தை மாடு கிளம்புமுன்னல் தின்று முடித்துவிட வேண்டும்.

நோன்பன்று இரவு பூசைக்கு முன்னர் ஒருவர் கதை யொன்றை சொல்வதுண்டு இந்த நாட்டுப் புறக் கதை இந்நோன்பின் தோற்ற வரலாற்றை உரைக்கின்றது-ஏழு அண்ணன் மாரும் ஒரு தங்கையும் வறுமையால் விறகு வெட்டியும் பிச்சை யெடுத்து வாழ்கின்றனர் இதைக்கண்ட ஔவையார் 'அம்மா நோன்பொன்றை இருந்தா, தை மறந்தாமாசி, அய்த்தா ஆடி மாதம் கைக்கொள். அதற்கு அள்ளி மூணு சிரங்கை நுள்ளிமூணு சிரங்கை. முன்கை மூன்று புறங்கை மூணு நெல்லை ஏறு பொழுதில் எடுத்து இறங்கு பொழுதில் குத்தி மாவாக்கனும்' என்று சொல்லவே அத்தங்கையும் அவளும் அன்று மாலை அண்ணன்மார் கொணர்ந்த மீன்களையும் மறுத்தாள். மறுநாள் அந்த மீன்கள் தங்கமாகவே அவர்களின் வறுமை நீங்கியது. தனக்கு திருமணம் முடிந்ததும் தங்கை தன் அண்ணியிடம் சொன்னாள் இவ் விரதத்தை. தைமாதம் வந்து நோன் பன்று அண்ணியும் குறுணி நெல்லை குந்தாணியில் போட்டு குத்தி கொழுக்கட்டை செய்து உப்பில்லை என்று வண்ணாத்தியிடம் போட்டாள். அவளும் நன்றாயில்லை என அதை வெளுக்கும் கல்லுக் கடியில் போட்டாள். செல்வம் போனது. வறுமை விறகு வெட்டத் துண்டியது. தங்கை யறிந்து வருந்தினாள் வண்ணாத்தியிடம் கேட்டு கல்லுக் கடியில் தங்கக் கொழுக்கட்டைகளைக் கண்டாள். மீண்டும் செல்வவளம், மகிழ்ச்சி வாழ்வு.

இந்த ஒரேகதையை ஏழு நாளும் சொல்கின்றனர். இறுதி நாள் நோன்பைதூக்கிவிடுதல் என்பர், அன்று கூழ் தாயரித்துக் குடிப்ப துண்டு. இக்கதையால் நோன்பன்று வண்ணாத்திகளைக் கடுமையாக விலக்குகின்றனர்.

வேறு மாவட்டங்களில் இல்லாத இந்நோன்பு இங்குஏன்வந்தது வந்தது? எப்படி வந்தது? ஒள்வையாருக்கும் இம் மவட்டங்களுககும் என்ன தொடப்பு என்பது எண்ணிப்பார்க்கத்தக்கது சில தொடர்பு கள் தெளிவாகின்றன முதலாக "தடவுநிலைப்பலவின் நாஞ்சில் பொருநன் மடவின்மன்ற" (புற' 140) என்று ஔவையார் நாஞ்சில் நாட்டு மன்னனின் தேற்றா ஈகையைப் போற்றியுரைக் கின்றார். ஔயைார் சில விறலிகளோடு இம் மாவட்டங்களுக்கு வந்ததை அறிகின்றோம். இரண்டாவது, ஔவைக்கு இங்கே கோயில்கள் பல உள்ளன. அவைகளுள் சிறப்பு பெற்றது செண்பக

ராமன் புதூர் அருகில் உள்ள கோயிலாகும். மூன்றாவது குமரி மாவட்டது முப்பந்தல் தல வாலாறு' ஔவையைப் பற்றி ஒரு செய்தி கூறுகிறது. சேர சோழ பாண்டியார்கள் மூன்று பந்தலின் கீழ் ஒரு சேர அமர்ந்திருந்தனர் என்றும் இதனைக்கண்ட ஔவை அவர்களைப்பாடினர் எனவும் அறிகிறோம். நான்கவது, ஔவையார் என்று பெண்களுக்குப் பெயரிடும் வழக்கம் இம் மாவட்டங்களில் உண்டு. ஐந்தாவது, ஔவையாரைப்பற்றிநாடோடிக் கதைகள் பல இங்கேயுண்டு. அவைகளுள் ஒன்று முன்பு வானம் மிகத் தாழ்ந்து தலையைத் தட்டுமாறு இருந்ததாகவும் இதைக் கண்ட ஔவை கம்புக்கும் கழைக்கும் எட்டாமல் செல்' என்று சொன்னதாகவும் உண்டு. ஆறுவது, கூனக்கிழவி தொடர்பான விளையாட்டுகள் பலவற்றை இங்கு சிறுவர்கள் விளையாடுகிறுர்கள். இவைகளை எண்ணிப்பாக்கும் போது இங்கு இந்நோன்பு இருப்பதில் வியப்பில்லை.

அதிகமானின் தூதாட்டி, முருகனிடம் சுட்டப்பழம் கேட்ட மூதாட்டி வள்ளுவரின். தமக்கை, விநாயகனின் பக்தை எனப் பல்வேறு ஔவை உண்டே இதில் எந்த ஔவையருக்கு நோன்பு என்பது எண்ணிப்பார்க்கத்தக்கது. கொழுக்கட்டை விநாயகருகது பிடித்தமானது. வினாயகரோ ஔவைக்குப்பிடித்தமானவர் எனவே வினாயகர் தொடர்பான ஔவையாக இருக்கலாமா என்ருல், நாஞ்சில் வள்ளுவனைப்பாடிய சங்ககால ஔவையையும்மறக்க முடியவில்லை. சங்க இலக்கியத்திலும் இதற்கு சான்றில்லை. வேறு இலக்கிய சான்றுகளும் இல்லை. தமிழ் அகராதி இந்நோன்பைச் செவ்வாய் நோன்பென்றும் வருசம் இருமுறை செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் புருஷரும் ஆண் குழந்தைகளும் அறியாமல் வேளாள மகளிரால் மிக ரகசியாக அனுஷ்டிக்கப்படும் விரதம் என்று கூறுகிறது. குமரி வட்டத்தில் இந்நோன்பன்று இரவு பாலியலைப்பற்றியும் கற்பிக்கிறுர்கள்: எப்படி இருப்பினும் இப்படியும் ஒரு நோன்பு தமிழகத்தின் தென் கோடியில் இன்று நடை பெறுகிறது என்பது எண்ணிப் பார்க்கத் தக்கது.

---


**கொங்கு** 26, இந்திரா நகர், சென்னை-600020

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 0-30 |
| ஆண்டுக் கட்டணம் | 3-50 |
| மூன்ருண்டுக் கட்டணம் | ,, 10-00 |
| ஆயுட்கட்டணம் | ,, 100-00 |

# ஓரை

புலவர் முத்து. எத்திராசன் B.A.

"தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்."
(அகம் 110)

ஆயத்தாரோடு கடலில் விளையாடுதல், கடற்கரைச் சோலையில் சிறுவீடு கட்டுதல், சிறுசோறு சமைத்தல் போன்றவைகள் மகளிர் (இளம் பெண்கள்) ஆடும் ஆட்டங்களாக பண்டைத் தமிழகத்தில் வழங்கி வந்தன. அவற்றுள் ஓரை என்பது கடல் விளையாட்டில் (நீர் விளையாட்டில்) அடங்கும் ஒருவகை விளையாட்டாகும்.

'பண்டை விளையாட்டுகள்' என்ற தலைப்பில் வித்துவான் கோ. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் 'ஓரை' என்பதனைக் குறிக்குங்கால் அது ஒருவகை விளையாட்டு என்று கூறுவர். மேலும் அவர் "அது இன்னது என்று நன்றாக விளக்கப்படவில்லை. அது பஞ்சாய்ப் பாவை கொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்" என்று கூறியுள்ளார்.

நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம் முதலியவற்றின் உரையாசிரியர்கள் கூறிச் சென்றதையே அவரும் கூறியுள்ளார்.

'ஓரை' என்பதனைப் பற்றி எவரும் விளக்கமாகக் கூறவில்லையாதலால் அதனைப் பற்றிய சிந்தனை என் மனதில் எழுந்தது. மேலும் அதனைப் பற்றி ஆய்வு செய்கின்றபோழ்து அது ஒருவகை நீர்விளையாட்டு என்று அறிந்ததுடன் அவ்விளையாட்டில் நானும் ஈடுபட்டு திளைத்து இருக்கின்றேன் என்று எண்ணும்போது என் மனம் மிக்க மகிழ்ச்சியடைந்தது. 'ஓரை' விளையாட்டு இன்றும் பெயரில் சற்று திரிபு ஏற்பட்டு 'ஓரி' என்று தென்னார்க்கடு மாவட்

டத்திலுள்ள திண்டிவனம் வட்டத்தில் இளம்சிறாரிடையே வழக்கிலுள்ளதை நாம் அறியலாம்.

ஓரையைப் பற்றி சங்க நூல்களில் பதினேழு பாடல் களில் காண்கின்றோம். அவை முறையே குறுந்தொகையில் மூன்று பாடல்களும் ( 8, 316, 401) நற்றிணையில் நான்கு பாடல்களும் (68 398 143, 155) அகநானூற்றில் மூன்று பாடல்களும் (49, 60. 2 9) புறநானூற்றில் ஒன்றும் (176) ஆக பதினோறு பாடல்களாகும்.

'ஓரை' என்பது இன்னது என்று விளக்கமாகக் கூறும் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் ஓரளவு ஊகித்தறிவதற்கு இடம் இருக்கிறது.

"ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய்" (நற்றிணை-155) "ஓரை மகளிர்" (குறுந்-401) 'ஓரை மகளிர்" (குறுந்-316) எனவரும் சொற்களைக் கொண்டு 'ஓரை' இளம் பெண்கள் ஆடும் ஆட்டம் என அறிகின்றோம். ஆனால் அவ் விளையாட்டு இன்று இருபாலரிடையே வழங்கி வருகின்றது.

**ஓரையும் ஆயமும் நொச்சியும் காண்தொறும்**
**நீர்வார் கண்ணேன்** —நற்-143

**ஓரை ஆயமொடு பந்துசிறி தெறினும்.** — அகம்-219

என்பன போன்ற வரிகள் நமக்கு, தலைவி தோழிகளுடன் சேர்ந்து ஆடிய ஆட்டமாக எடுத்து காட்டுகிறது.

"கதிரவன் மேற்கு திசையிலே சென்று மறைதலாலே பொழுது போயிற்று என்பதனை அறிந்து வீட்டிலுள்ளோர் என்ன கூறுவார்களோ என்ற அச்சத்தால் நீர் அலைத்த லாலே கலைந்த கூந்தலைப் பிழிந்தும் பயத்தால் வயிற்றில் அடித்துக்கொண்டும் ஒரு சேரக்கூடி தம்மூர்ச் சென்றனர்" என் நற்றிணை 398 ஆம் பாடல் நமக்கு அழகாக எடுத்துக் காட்டுவதாலும்

**அடும்பி ஞய்மலர் விரைஇ நெய்தல்**
**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**
**ஓரை மகளி ரஞ்சியீர் ஞெண்டு**

**கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநாள்.**

—குறுந்தொகை-401

என அப்புலவனர் எடுத்துக்காட்டுவதாலும் 'ஓரை' ஓர்வகை நீர்விளையாட்டு என அறிகிறோம்.

நெய்தல் நிலமக்கள்தான் கடல்நீரில் இவ்வகை விளையாட்டை கைக்கொண்டார் என்பதுடன் மற்றை நிலமக்களும் இதனைக் கையாண்டனர் என்பதற்கு பல பாடல்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக நன்னாகனார் பாடிய புறநானூற்று 176 ஆம் பாடலைப் பார்ப்போம்.

**ஓரை யாய்த் தொண்டொடி மகளிர்**
**கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்**
**யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்**
**தேனா றாம்பற் கிழங்கொடு பெறூஉம்**
**இழுமென வொலிக்கும் புனலம் புதவிற்**
**பெருமா விலங்கை.**

இப்பாடல் மருதநில மக்கள் 'ஓரை' விளையாட்டை ஆடியதைக் குறிப்பிடுகிறது.

நற்றிணை 68 ஆம் பாடல் குறிஞ்சி நிலத்தைப் பற்றிக் குறிப்பதாலும் நற்றிணை 143 ஆம் பாடல் பாலை நிலத்தைக் குறிப்பதாலும் மற்றை நிலத்திலுள்ள இளமகளிர் இவ்விளையாட்டைக் கையாண்டனர் என அறிகிறோம்.

இனி அவ்வாட்டம் இன்னது என்பது என அறிவதற்கு வண்ணப்புற கந்தரத்தனர் பாடிய அகம் 49 ஆம் பாடல் நமக்குத் துணை செய்கிறது.

**செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்**
**கோதை யாயமொ டோரை தழீஇத்**

எனவரும் வரிகளின் பொருள் 'செல்லும்' இடந்தொறும் உடம்பின் நிழலைப் போலச் சென்று கோதையையுடைய ஆயத்தாரோடு விளையாடும் விளையாட்டு என்பது. ஆகவே

ஓரையாடுபவர் ஒருவரையொருவர் நிழல்போலத் தொடர்ந்து விளையாடுபவர் என்பதால் அது நிலத்தில் விளையாடும்—ஓடிபிடிக்கும் ஆட்டம் அல்ல என்பதுடன் நீரினுள் ஒளிந்து ஆடும்-பட்டடிக்கும் ஆட்டம் என்பதை நாம் அறிகிறோம். ஏனெனில் உடலின் நிழல்போல தொடரும் என்ற உவமை நீர்ன்கண் நிகழும் இவ்வாட்டத்தைக் குறிப்பதற்காக அமையுமேயன்றி நிலத்திற்கல்ல. 'மெய்நிழல்போல' என்ற சொற்றொடர், நீரில் ஒருவரையொருவர் மூழ்கி நீந்தி செல்லும் போது செல்லும் தோற்றம் பொருத்தமாக உள்ளது. இது இன்று காணும் ஓரியாட்டத்தில் நன்றாகக் காணலாம். அவ்வாட்டம் பட்டடிக்கும் ஆட்டம் என்றும் 'ஓரி' என்றும் கூறுவர்.

நீர் நிலைகளில் இளஞ்சிறுவர் அல்லது சிறுமியர் குளிக்கச் செல்லுமுன் தங்களுக்குள் ஓரிபாடலாம் என்று தீர்மானித்து விட்டால் போதும். உடனே எல்லோரும் நீரில் குதிக்கத் தொடங்குவர். அவ்வாறு குதிப்பதற்குமுன் 'பின்னாலே குதிப்பவன் ஓரி', என்று சொல்லியவாறே குதிப்பர். எவர் பின்னாலே குதிக்கின்றாரோ அதாவது கடைசியாக குதிப்பவர்—ஓரியாகக் கருதப்படுவர் ஆவர். அவர் மற்றவரில் எவரையேனும் பிடிக்கவேண்டும். நீரில் மூழ்கியிருக்கும்போதோ நிலத்தில் இருக்கும்போதோ பட்டடிக்க வேண்டும் என்பதாம்.

நீரில் ஓரியாக இருப்பவர் மற்றவரைப் பிடிக்க முயலும் முயற்சியானது 'மெய்ந்நிழல் போல' அதாவது உடலைத் தொடர்ந்து பிடிக்க முயற்சிக்கும் காட்சி அமைந்திருக்கும். இவ்விளையாட்டில் ஈடுபட்டவர்க்கு வண்ணப்புற கந்தரத்தனார் கூறிய ஓரையாட்டம் நன்கு புரியும் என்பதுடன் இவ்வாட்டம் இன்றும் மறையாது 'ஓரி' என்ற பெயரில் வழங்கி வருவதைக் கண்டு நம் மகிழ்ச்சி அளவிற்கடங்காது என்பதே.

---

குறிப்பு: ''ஓரி பிடித்தல்'' விளையாட்டு, கொங்கு நாட்டு இளைஞர்களிடமும் சிறந்து விளங்குகின்றது.

—ஆசிரியர்

# நடுக்கல் வழிபாடு-4

புலவர் செ. இராசு

காடுகள் மிகுதியான பழங்காலத்தில் விலங்குகளால் ஊருக்குத் தொல்லை ஏற்பட்டபொழுது அவைகளிடமிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றி இறந்த வீரர்களுக்கு நடுகல் நடுவர்.

பவானியில் காட்டுப்பன்றி வேட்டை நடுகல்லேயும், புட்டத்தில் யானைப் போர் நடுகல்லேயும், ஊத்துக்குழி, வெள்ளோடு, பழமங்கலம், குலவிளக்கு, பேரூர், தாரமங்கலம் போன்ற பல்வேறு இடங்களில் புலியுடன் பொருத நிலையில் பல நடுகற்களைக் காணுகின்றோம்.

ஊராட்சிக் கோட்டை மலை அடிவாரத்தில் ஒரு நடுகல் **பசவேசர் துணை** என்று தொடங்குகிறது. வீரசைவனான அவன் உண்மையிலேயே வீரமிகுந்த சைவனாக இருந்துள்ளான்.

“பசவேசர் துணை
ஆனந்த வருஷம் சித்
திரை மாதம் 15 தியதி ஊ
ராள்ச்சிக் கோட்டை ஆள்
கை கெம்பை நாயக்க
ர் புலிகுத்திப்பட்டி றந்தகா
ணிபாட்சி அப்பைய நாயக்
கர்க் இந்த மானுவக்காடும் பூ
ராள்ச்சியும் கொடுத்தோம்.”

என்பது அக் கல்வெட்டாகும்

ஈரோடு நகரில் நாச்சிமுத்து என்பவர் ஒருவர் அஞ்சல் நிலையத்தில் பணிபுரிகின்றார். **புலிக்குத்தி நாச்சிமுத்து** என்பது அவர் பெயர். அவர் முன்னோர் விஜயமங்கலம் பகுதியில் கொடிய புலி ஒன்றைக் கொன்று ஊர் மக்களைக் காப்பாற்றினராம். விட்டிலேயே நடுகல் உள்ளது. பரம்பரையில்

மூத்த மகன் புலிக்குத்தி என்ற பெயர் வைத்துக் கொள்கின்றான். பெண்கள் நடுகல் அருகே போவதில்லையாம்.

**இன்றும் .... நடுகல்**

கொங்கு நாட்டில் உள்ள தொட்டிய நாயக்கர்கள் இன்றும் இறந்தபின் 'கல்நாட்டுதல்' என்ற சடங்கினைச் செய்கின்றனர். சென்னைப் பக்கத்திலும் சில சமூகத்தார் களிடையே இவ்வழக்கம் உண்டு என்பர்.

'சருமாதி கல்லெடுப்பு' என்ற பழமொழியும் வழங்குகிறது. "கல் என்றாலும் கணவன்" என்ற பழமொழிகூட நடுகல்லைக் குறிக்கும் என்பர் சான்றோர். கொங்கு நாட்டு வேளாளர் திருமண நிகழ்ச்சியில் நடுகல் வழிபாடு (நாட்டுக் கல்) இன்றும் உண்டு.

கொங்கு நாட்டில் உள்ள இராசா, அண்ணன்மார் அப்பிச்சிமார், சடையப்பன், குப்பியண்ணன், கருப்பணன், ராவுத்தன், செல்லக்குமரர், வீரகுமாரசாமி, முத்தையன் கோயில்கள் அனைத்தும் நடுகல்லுக்கு அமைந்த கோயில்களே! பிற்காலத்து பல ஊர்களில் அமைக்கலாயினர்.

கோவை மாவட்டத் திருப்பூரில் தியாகி குமரனுக்கு நினைவுக்கல் எடுத்திருப்பதையும், அறிஞர் அண்ணாவின் சமாதியையும் இன்றைய நடுகற்கள் எனலாம்.

**வரலாறு கூறும் நடுகற்கள்**

கொங்கு நாட்டுப் பழங்குடி மக்கள் வேட்டுவர்களே! இன்று பெரும்பான்மை மக்களாய் விளங்கும் வேளாளர்கள் வேட்டுவர்களை வென்று குடியேறியவர்களே ![60]

வேட்டுவர் நடுகற்கள் பலவற்றில் 'ஊராளி வேட்டுவன், என்ற தொடர் காணப்படுகிறது.

கொடுமுடி அருகே இராசேந்திர சோழனின் கங்கை கடார வெற்றியைக் குறிப்பிடும் நடுகல் ஒன்று உள்ளது.

---

60. நடுகல் கருத்தரங்கு — புலவர் செ. இராசு

கொங்குச் சோழர்கள் ஆட்சிக்காலம் அது. அவர்கள் தனி அரசேனும் தஞ்சைச் சோழர்க்கு அடங்கியிருந்தனர் என்ற செய்தி இதனால் பெறப்படுகிறது.

செங்கம் நடுகல் ஒன்றில் எங்கெந்தத் தலைவர்கள் எப்பகுதியை ஆண்டனர் என்பதையும், தகடூர் நடுகல் ஒன்றில் ஒரு அரசன் வஞ்சித்து நாடு கொண்டதையும் காணுகின்றோம். 61 ஒவ்வொரு நடுகல்லும் ஏதாவது ஒரு அரும் வரலாற்று நிகழ்ச்சியைக் கூறுகிறது.

கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களைவிடச் சிறப்பாக அக்கால உருவ அழகு, உடையழகு, சிற்பத்திறன், பண்பாடு, கலை இவைகளை நேருக்கு நேராகக் காட்டி நம் பழந்தமிழர் நாகரிகத்தை இன்று காட்டும் சிறந்த புகைப்படமாக—ஒளிப்படமாக விளங்கி நிற்பது நடுகற்களே.

வாழ்த்தி வணங்கும் தெய்வமாகவும் நின்றிலங்குகிறது நாமும் அதன் தெய்வீகச் சிறப்புக்காக மட்டுமல்ல! அதன் பெருமைமிக்க வரலாற்றுச் சிறப்புக்காகவும் சென்று வணங்குவோம் வாருங்கள்.

**நடுகல்லைக் கண்டுணர்வோம்**
**நல்லவர லாறு காண்போம்.**

---

61. செங்கம் நடுகற்கள்

(முற்றும்)

இலங்கையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இடம் பெற்று ஆராயப்பட்ட கட்டுரை.

பிற்சேர்க்கை :

## நடுகல் எடுத்தல் — சில நிலைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) தொல்காப்பியனார் இ. மு. 5 நூற். | காட்சி | கால்கோள் | நீர்ப்படை | நடுதல் | பெரும்படை | வாழ்தல் |
| (2) இளங்கோவடிகள் கி பி 2 நூற். | காட்சிக் காதை | கால்கோட் காதை | நீர்ப்படைக் காதை | நடுகற் காதை | — | வாழ்த்துக் காதை |
| (3) ஐயன் ஆரிதனார் 10 நூற். | கற்காண்டல் | கற்கோல் நிலை | கல் நீர்ப்படுதல் | கல்நடுதல் | இற்கொண்டு புகுதல் | கல்முறை பழிச்சல் |
| (4) பெருந்தேவனார் 12 நூற் | கல்தேடுதல் | — | நீருட் குளிப்பித்தல் | கல் நடுதல் | பெரும்படை | வாழ்த்தல் |
| (5) வைத்தியநாத தேசிகர் 17 நூற். | கற் கண்டுடுதல் | கற்கோள் நிலை | கல்நீர்ப் படுத்தல் | கல் நாட்டுதல் | இற்கொடு புகுதல் | கல்முறை பழிச்சல் |

பிற்சேர்க்கை :

## நடுகல்லைக் குறிக்கும் புலவர்களிற் சிலர்

அம்மூவனார் (அகம் 35)
அளி நாகன் முல்லையார் (புறம் 306)
ஆவூர் மூலங்கிழார் (புறம் 261)
இளங்கீரனார் (அகம் 289).
இளங்கோவடிகள் (வஞ்சி)
உறையூர் இளம்பொன் வாணிகனார் (புறம் 264)
ஐயன் ஆரிதனார் (வெண்பா மாலை—பொது)
ஐயூர் முடவனார் (புறம் 314)
ஓதலாந்தையார் (ஐங்—352)
ஔவையார் (புறம் 232)
கடியலூர் உருத்திரங் கண்ணனார் (பட்டினப்பாலை)
கல்லாடனார் (கல்லாடம்)
கொங்குவேளிர் (பெருங் 1—46—271—273)
சித்தலைச்சாத்தனார் (அகம்—53)
சேரமான் பெருமாள் நாயனார் (திரு 16)
சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார் (புறம் 265)
திருவள்ளுவர் (771)
தொல்காப்பியர் (புறத். 5)
நெட்டிமையார்
நோய்பாடியார் (அகம் 67)
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் (புறம் 329)
மருதன் இளநாகனார் அகம் 131, 297, 343)
மாங்குடி கிழார் (புறம்—335)
புத்திமித்திரர் (வீரசோ 98)
பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் (மலைபடு 388—897)
பொத்தியார் (புறம் 221, 223)
வடமோதங்கிழார் (புறம் 260)
வைத்தியநாத தேசிகர் (இலக்கண விளக்கம்)

# நொய்யல் படுகையில் கல்மரம்

சு. கி. செயராமன்,
புவியியல் ஆய்வாளர்

கோவை மாவட்டத்தில் மங்களம் எனும் கிராமத்தருகே நொய்யலாற்றுப் படுகையில் கல்லாகச் சமைந்த மரத்துண்டுகள்



(Wooden Fossils) ஆப்ரோ (AFPRO) தமிழக நிலத்தபடி நீராய்வுக் குழுவைச் சார்ந்த ஆசிரியரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அழுகாத நிலையில், அதாவது பாக்டீரியாக்களால் அணுகமுடியாத நிலையில் மணல் அல்லது களி மண்ணில் புதையுண்ட மரம் அதன் நுண்ணிய துளைகளில் நிலத்தடி நீரில் கரைந்துள்ள தாதுப் பொருட்களை முக்கியமாகச் சிலிகா அல்லது கால்சைட்டைப் பெறுகிறது. பிறகு மெதுவாக மரத்திலுள்ள செல் சுவர்களும் இந்தக் கனிமக்கூறுகளில் நிரப்பப்பட்ட செல்லு லேசானது முழுவதுமாகக் கரைக்கப்பட்டு விடுகிறது. அதாவது செல்லுலேசு சிலிகாவினுல் முழுவதுமாக இடப்பெயற்சி .செய்யப்படுகிறது இம்மாற்றத்தை பழைய ஓட்டுக்குப்பதிலாக புது ஓட்டை மாற்றும் கட்டிடக் கலைஞரது வேலைக்கு ஒப்பிடலாம். பல்லாண்டு-களாக நிகழும் இம் மாற்றத்தினுல் மரம் முழுவதும் கல்லாகச் சமைந்து விடுகிறது. இதையே கல்மரம் (Fossil) என்பர்.

கொங்கு நாட்டில் கல்மரம் கண்டு பிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். 1940-ம் ஆண்டு புவியியல் நிபுணர் திரு. கிருட்டிணன் அவர்களால் சாத்தனூருக்கருகில் பல கல் மரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. திருச்சி மாவட்டத்தில் கூடமங்கலத் தருகிலும் மரப்பாசில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள. இந்தக் கொங்கு நாட்டு கல் மரம், பல நூருண்டுகளுக்கு முன் வாழ்ந்து அழிந்து பட்ட பூக்கும் தாவரமாகயிருந்திருத்தல் கூடும். புவியியற்படி சிறிதண்மைக்காலத்தே வாழ்ந்த மரம் எனவும், மரம் சாய்ந்த நிலையில் கிடப்பதால் இது பிறிதொருயிடத்திலிருந்து வேரறுக் கப்பட்டு ஆற்றின் போக்கில் வந்து இங்கு புதையுண்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. புதையுண்ட இடம் ஒரு வறண்ட மணல் நிறைந்த குளத்தின் அமைப்பிலுள்ளது. இந்த மணற்படிவம் கடினப் பாறைகளில் மேலுள்ளது.

இந்தக் கண்டு பிடிப்பு தாவரப்பரிணும வளர்ச்சி பற்றி அறியவும், கொங்கு நாட்டில் இத்தாவரம் வளர்ந்த போது இருந்த தட்ப வெப்ப நிலைப்பற்றியும் அறியவுதவும். ○

---

'ரிசர்வ்' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு 'முன்னமைவு என்று சொல்லலாம். 'முன்னமைவு செய்யப்படும்' 'முன்னமைவு செய்து கொள்க' என வழங்கலாம்.

கோ. உலகநாதன்
பச்சையப்பன் கல்லூரி.



# சிறுநீர்ப் பகுப்பாய்வு

## (Urinalysis)

ந. மனோகர்

சிறுநீர் பலவிதமான அங்கக அனங்ககப் பொருள்களின் பல்திறக்கூட்டொருமை மிக்க ஒரு நீர்க்கரைசல் ஆகும். பெரும்பாலான பொருள்கள் உடலின் வளர்சிதை மாற்றத்தின் கழிவுப் பொருள்களோ அல்லது உண்ட உணவினின்று நேரடியாகப் பெறப்பட்ட விளை பொருள்களோ ஆகும். யூரியா யூரிக் அமிலம், கிரியேட்டினைன் முதலியன அதில் அடங்கிய மிகவும் முக்கியமான அங்ககப் பொருள்களாகும். குளோரைடுகள், பாசுபேட்டுகள், சல்பேட்டுகள், அம்மோனியா முதலிய பொருள்களே இதன் தலையாய அனங்ககப் பொருள்கள்.

சில பொருள்கள் சிறுநீரில் நோய்க்குறிகள் இருக்கும் போது மட்டுமே காணப்படும். அவைகளில் மிக முக்கியமானவைகள் புரதங்கள், மாவுப் பொருள், அசிடோன், பித்த உப்புக்கள், இமோகுளோபின் முதலியனவாகும். இயக்கு நீர்கள்—Hormones மாறுபட்ட அடர்வுகளில் காணப்படுகின்றது. அவற்றின் கண்டு பிடிப்பும், அளவும் நோய்க்குறிச் சோதனைக்கு மிகக் குறிப்பிடத்தக்க வகையில் தேவையான ஒன்றாகும். பொதுவான கருப்பச் சோதனைகள் இயக்கு நீர் வெளியேற்றத்தையேச் சார்ந்துள்ளன, கரைசலாக உள்ள இப்பொருள்கள் தவிர, சிறுநீர், தன்னுள், நோய்க்குறி காட்டும் வகையில் மிக முக்கியமான, பல நுண்ணிய கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன.

(தொடரும்)

உணவு உற்பத்தியில் தன்னிறைவு !

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்க இளைஞர் அணி !

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம் !

குடிசைகளுக்குப் பதில் மாடி வீடுகள் !

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை நீங்கிட
கைரிக்ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷாக்கள் !

இவை தமிழ்நாடு அரசின் சாதனைகளில் சில

இதேபோல்

நீங்களும் கடினமாக உழைக்கிறீர்கள் !

நிறைவாக வருவாய் பெறுகிறீர்கள் !

ஆயினும்

நாடும் வீடும் பொருளாதாரத்
தொல்லைக்கு ஆட்படுகின்றன !

காரணம் என்ன ?

நாளுக்கு நாள் பெருகிடும்
மக்கள் தொகையே இதற்குக் காரணம் !

எனவே ?

செழித்திடும் நன்மைகளை
நாட்டில் நிலைத்திடச் செய்ய
நாடும் வீடும் பொங்கி மகிழ்ந்திட
அமையுங்கள் அளவான குடும்பம் !

குடும்ப நலத்துறை

தமிழ்நாடு அரசு

'KONGU'　　பதிவு எண் : M 8783

விறைவாக-

வேகமாக

ஏ. பி. டி-

பார்சல் சர்வீஸ்

சேவை செய்கிறது-



# விரைவுக்கு அனுமன்

கம்பர் சொன்னார்

"எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான்"

எண்ணத்தைவிட
அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக்
காட்சியைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்,

## A. B. T. பார்சல் சர்வீஸ்

226, டாக்டர் நஞ்சப்பா சாலை, அஞ்சற்பெட்டி எண் 1414.
கோயம்புத்தூர் - 641018

ஆசிரியர் : புலவர் செ. இராசு

அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி, ரேணுகா பிரிண்டர்ஸ்,
வெளியிட்டவர் : ச. பிரகதம், [ சென்னை-600020.
அலுவலகம் : 26, இந்திரா நகர், சென்னை-600020.